**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :183/2009 பொருள் எண்.46

**சென்னை மாநகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளியில் 2008–2009 கல்வி ஆண்டு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ–மாணவிகளுக்கு கற்றல் திறன் சிறக்கும் வகையில் ரொக்கப்பரிசு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டி.**

சென்னை மாநகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியரை ஊக்கப்படுத்தி அவர்களின் கற்றல் திறன் சிறக்கும் வகையில் தொடர்ந்து கல்வியில் கவனம் செலுத்தும் நோக்கத்தோடும், உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காகவும், இதர கல்வி செலவினங்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்ற நோக்கத்துடன் மார்ச் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற 10ம்வகுப்பு பொதுத்தேர்வில் 500க்கு – 400 மதிப்பெண்களுக்கு மேல் பெறும் மாணவ/மாணவியருக்கு ரொக்கப்பரிசாக தலா ரூ.1000/– ம், 12– ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 1200க்கு –1000 மதிப்பெண்களுக்கு மேல் பெறும் மாணவ/மாணவியருக்கு ரொக்கப்பரிசாக தலா ரூ.1,000/–ம், பொதுத்தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் 100க்கு 100 மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவியருக்கு தலா ரூ.500/–ம், என ரொக்கப்பரிசாக வழங்கப்படுவதாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2008–2009 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட பட்ஜெட் உரையில் தெரிவித்துள்ளார்.

மேலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சென்னை மாநகராட்சி பள்ளியில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்கு தலா ரூ.1,500/– ரூ.1,000/– ரூ.750/– ரொக்கப்பரிசாகவும், மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்கு தலா ரூ.1,500/– ரூ.1,000/– ரூ.750/– ரொக்கப்பரிசாகவும், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் ஒவ்வொரு பள்ளியிலும் முதல் இடம் பெறும் மாணவ/மாணவிகளுக்கு தலா ரூ.500/–ம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை நடப்பு கல்வி ஆண்டு 2009–10 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு 2009 ஆம் ஆண்டில் நடை பெற்ற பொதுத்தேர்வில் 10 ஆம் மற்றும் 12ஆம் வகுப்பில் சாதனை புரிந்த மாணவ/மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படவுள்ளது.

எனவே கீழ்கண்டவற்றிக்கு மன்றத்தின் அனுமதி ஆணை வேண்டப்படுகிறது.

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2008–2009 ஆம் ஆண்டு வரவு – செலவு திட்ட (பட்ஜெட்) உரையில் அறிவித்த இத்திட்டங்களை2009–10 ஆம் ஆண்டிலும் மற்றும் இனி வரும் காலங்களில் ஒவ்வொரு கல்வியாண்டிலும் நடைமுறைப்படுத்த அனுமதியும்,

2. 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வின் RESULTS வெளிவந்தவுடன் மாணவ/மாணவிகளுக்கு ரொக்கப்பரிசு வழங்கவும்,

3. 1200 மாணவ/மாணவியருக்கு செலவாகும் தொகையான ரூ.11,36,750/– ம் (ரூபாய் பதினோரு இலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) கணக்கு குறியீடு எண்.803ல் முன்பணமாக பெறவும், இச்செலவினத்தை 2009–10 ன் மாநகராட்சி வருவாய் வரவு செலவு திட்டம், இயக்க செலவின திட்டம், கணக்கு குறியீடு எண்.166 கல்விச்செலவினங்கள், 23 உயர்நிலைக்கல்வி என்ற கணக்குத் தலைப்பில் சரிசெய்வதற்கும்,

4. இத்தொகையினை கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் காசோலையாக வழங்கவும்,

**க.து.ந.க.எண்.அ1/5748/2009.**

சென்னை மாநகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளியில் 2008–2009 கல்வி ஆண்டுபொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவிகளுக்கு கற்றல் திறன் சிறக்கும் வகையில் ரொக்கப்பரிசு வழங்கிட நிலைக்குழுக்கள் கல்வி, மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதியின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 16.06.2009 அன்று தீர்மான எண். 20/2009–ன்படி நிலைக்குழு(கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு & நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.75/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>க.து.ந.க.எண்.அ2/2955/09</u>**
**<u>ஆணையர் அவர்களின் 20.05.09 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :184/2009 பொருள் எண்.47

**<u>சென்னை மாநகராட்சி அனைத்து பள்ளி மாணவர்களுக்கு புத்தகபை வழங்குவது குறித்து</u>**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2009–2010 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், சென்னை மாநகராட்சி பள்ளியில் படிக்கும் அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் புத்தக பைகள் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்.

அதன் பேரில், மூன்று நிறுவனங்களிலிருந்து வகுப்பிற்கு ஏற்றவாறு மூன்று விதமான அளவுகளிலும் அதாவது வகுப்பு 1 முதல் வகுப்பு 5 வரை படிக்கும் மாணவர்களுக்கு தோராயமாக ரூ.130/– மதிப்பில், வகுப்பு 6 முதல் 8 வகுப்பு ரூ.140/–மதிப்பில் மற்றும் ரூ.175/– மதிப்பில் 9 முதல் 12 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு விலைப்புள்ளி மற்றும் இதர விவரங்கள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கு புத்தக பைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி, புத்தகபைகள் வாங்கவும், மேலும், இத்திட்டத்திற்காக ஆகும் மொத்த இச் செலவினத் தொகை தோராயமாக ரூ.1,58,56,210/–என எதிர்பார்க்கப்படுகிறது. 166 கல்வி செலவினங்கள் தொடக்க/நடுநிலை/உயர் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளின் தலைப்பில் நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்தவும், இதன்படி கோப்பினை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பிறகு பிரித்து நிறுவனத்திடமிருந்து பெறப்படும் பட்டியலுக்கான தொகையை வழங்கவும், நிலைக்குழுக்கள் (கல்வி), (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

09.06.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். 12 /09 நாள் 09.06.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.57/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/475/2009**
**ஆணையர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :185/2009 பொருள் எண்.48

**மண்டலம் 1, வார்டு 3 மற்றும் 10ல் சத்தியா நகர் மற்றும் நேரு நகர்களை இணைத்து பாலம் அமைக்கும் பணி**

சென்னை மாநகரில் உள்ள நீர்வழிகளின் குறுக்கே சிறு பாலங்கள் அமைக்க வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணிக்கு கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் மண்டலம் 1, வார்டு 3 மற்றும் 10ல் சத்தியா நகர் மற்றும் நேரு நகர்களை இணைத்து பாலம் அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் ஆகியவை கலந்தறிதற்குரியவர் மூலம் பெறப்பட்டு அதனடிப்படையில் மேற்கண்ட பணிக்காக 2008–2009ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.5,59,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

(1) இப்பணிக்கு 2008 – 2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையான ரூ.5,59,00,000/–(ரூபாய் ஐந்து கோடி அம்பத்தொன்பது லட்சம் மட்டும்)க்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன்படி ஒப்புதலும்,

(2) இப்பணியினை சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதியும், மற்றும்

(3) ஒப்பங்கள் கோரி பணியினை நடைமுறைப்படுத்தவும்,

மேற்குறிப்பிட்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (மற்றும்) நிதி) மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

15.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 59/2009 , நாள்: 15.6.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.64/09 நாள் 18.6.2009–ன் படிஇதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/476/2009**

**ஆணையர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :186/2009 பொருள் எண்.49

**மண்டலம்-1 மற்றும் 3, வார்டு– 2 (ம) 35ல் கேப்டன் காட்டன் கால்வாயின் குறுக்கே கிருஷ்ணமூர்த்தி நகர் மற்றும் எம்.கே.பி நகரையும் இணைத்து பாலம் அமைக்கும் பணி**

சென்னை மாநகரில் உள்ள நீர்வழிகளின் குறுக்கே சிறு பாலங்கள் அமைக்க வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணிக்கு கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் மண்டலம்-1 மற்றும் 3, வார்டு 2 மற்றும் 35ல் கேப்டன் காட்டன் கால்வாயின் குறுக்கே கிருஷ்ணமூர்த்தி நகர் மற்றும் எம்.கே.பி நகரையும் இணைத்து பாலம் அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் ஆகியவை கலந்தறிதற்குரியவர் மூலம் பெறப்பட்டு அதனடிப்படையில் மேற்கண்ட பணிக்காக 2008–2009ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.3,97,81,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

(1) இப்பணிக்கு 2008 – 2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையான ரூ.3,97,81,000/–(ரூபாய் மூன்று கோடி தொன்னூற்று ஏழு லட்சத்து எண்பத்தோராயிரம் மட்டும்)க்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன்படி ஒப்புதலும்,

(2) இப்பணியினை சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதியும், மற்றும்

(3) ஒப்பங்கள் கோரி பணியினை நடைமுறைப்படுத்தவும்,

மேற்குறிப்பிட்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (மற்றும்) நிதி) மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

15.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 60/2009 , நாள்: 15.6.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.65/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பா.து.ந.க.எண்.பி3/477/2009</u>**

**<u>ஆணையர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :187/2009 பொருள் எண்.50

**<u>மண்டலம்-3, வார்டு– 40ல் ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ். நகர்களை இணைத்து பாலம் அமைக்கும் பணி</u>**

சென்னை மாநகரில் உள்ள நீர்வழிகளின் குறுக்கே சிறு பாலங்கள் அமைக்க வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணிக்கு கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் மண்டலம்-3, வார்டு – 40ல் ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ்.நகர்களை இணைத்து பாலம் அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் ஆகியவை கலந்தறிதற்குரியவர் மூலம் பெறப்பட்டு அதனடிப்படையில் மேற்கண்ட பணிக்காக 2008–2009ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.2,37,00,000./- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

(1) இப்பணிக்கு 2008 – 2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,37,00,000/–(ரூபாய் இரண்டு கோடி முப்பத்தேழு லட்சம் மட்டும்)க்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன்படி ஒப்புதலும்,

(2) இப்பணியினை சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதியும், மற்றும்

(3) ஒப்பங்கள் கோரி பணியினை நடைமுறைப்படுத்தவும்,

மேற்குறிப்பிட்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (மற்றும்) நிதி) மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

15.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 61/2009 , நாள்: 15.6.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.66/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/474/2009**
**ஆணையர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :188/2009 பொருள் எண்.51

**மண்டலம்-5, வார்டு– 67ல் ஓட்டேரி நல்லாவின் குறுக்கே 'N' பிளாக் மற்றும் 'O' பிளாக் ஆகியவற்றை இணைத்து பாலம் அமைக்கும் பணி**

சென்னை மாநகரில் உள்ள நீர்வழிகளின் குறுக்கே சிறு பாலங்கள் அமைக்க வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணிக்கு கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் மண்டலம்-5, வார்டு– 67ல் ஓட்டேரி நல்லாவின் குறுக்கே 'N' பிளாக் மற்றும் 'O' பிளாக் ஆகியவற்றை இணைத்து பாலம் அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் ஆகியவை கலந்தறிதற்குரியவர் மூலம் பெறப்பட்டு அதனடிப்படையில் மேற்கண்ட பணிக்காக 2008–2009ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.2,52,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

(1) இப்பணிக்கு 2008 – 2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,52,00,000/–(ரூபாய் இரண்டு கோடி அம்பத்திரண்டு லட்சம் மட்டும்)க்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன்படி ஒப்புதலும்,

(2) இப்பணியினை சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதியும், மற்றும்

(3) ஒப்பங்கள் கோரி பணியினை நடைமுறைப்படுத்தவும்,

மேற்குறிப்பிட்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (மற்றும்) நிதி) மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

15.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.58/2009, நாள்: 15.6.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.63/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ8/291/2008**
**ஆணையாளர் அவர்களின் 05/06/2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :189/2009 பொருள் எண் 52

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

அரசாணை எண்.123, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 14/08/2006ல், அரசு ஊழியர்கள் இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை தங்கள் ஈட்டிய விடுப்பு கணக்கில் உள்ள விடுப்பினை, அவ்வரசாணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல், விடுப்பில் செல்லாமல் 30 நாட்களுக்கு சரண் செய்து பணம் பெற்றிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையின் மூலப்படிவம் சென்னை மாநகராட்சியில் பெறப்படாததால், அரசுச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை அவர்களுக்கு அரசு ஆணையினை அனுப்ப கோரி 10/01/2008 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு துணைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அவர்களின் கடிதம் எண்.2712/அவி3/08/1 நாள் 21/01/2008ல், அரசாணை நிலை எண்.123 ப.(ம)நி.சீ.துறை, நாள்14/08/2008 அரசு ஊழியர்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்றும் மாநகராட்சி பணியாளர்களுக்கான ஆணையினை நிதி (BPE) துறையிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. எனவே, அவ்வரசாணையினை பெற்றுத் தர கோரி, அரசுச் செயலாளர், நிதி (BPE)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கும் அதன் நகலை அரசுச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தலைமைச் செயலகம் அவர்களுக்கும் அனுப்பப்பட்டது.

மேலும், இணை இயக்குநர், நிதி(பொ.மா.க)துறை அவர்களின் கடிதம் எண்.52338/நிதி(பொ.மா.க)துறை/08 நாள் 23/10/2008ல், அரசு ஊழியர்களுக்கு 2 ஆண்டுக்கொருமுறை 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்வது குறித்த ஆணைகள் மாநிலப் பொதுத் துறை நிறுவனங்கள்/வாரியங்களுக்கு இதுவரையிலும் நீட்டிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நலைமைச் செயலகம் அவர்களுக்கு, சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.753/ 81, நாள் 26.04.1982ல் அவ்வப்போது அரசால் வெளியிடப்படும்விதிமுறைகள் / திருத்தங்களுடன் சென்னை மாநகராட்சியில் கடைப்பிடிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை 30 நாட்கள் ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்வது சென்னை மாநகராட்சியில் 20 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து பின்னர் 2001 ஆம் ஆண்டில் நிறுத்தம் செய்யப்பட்டு, தற்பொழுது திரும்ப வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், அரசாணை எண்.123, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 14/08/2006 சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு பொருந்தாது என கூறும் பட்சத்தில் பணியாளர்களிடையே அதிருப்தி ஏற்படுத்துவதாகவும், நிலைகுலைவை ஏற்படுத்தும் நிலை உருவாகுவதாக கூறி, அவ்வரசாணையினை சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் வகையில் அரசாணை பெற்றுத் தருமாறு ஆணையாளர் மூலம் 12/11/2008 கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு செயலாளர் அவர்களின் கடிதம் எண்.20152 / மாந3 / 2008 / 3, நாள் 25/05/2009 ல், சென்னை மாநகராட்சி பணியாளர்கள் 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பது தொடர்பாக தங்கள் அளவிலேயே அரசாணை(நிலை) எண்.123, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்:14/08/2006ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின்படி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை எண்.123, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்:14/08/2006 ல் கூறப்பட்டுள்ளபடி, அவ்வரசாணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் 30 நாட்கள் ஈட்டிய விடுப்பினை இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை சரண் செய்து பணம் பெற்றிடவும், ஈட்டிய விடுப்பினை ஒப்பளிப்பு செய்யும் கால இடைவெளி இரண்டு ஆண்டு காலம் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ம.க.கு.ந.க.எண்.அ8/291/2008**

எனவே, அரசாணை எண்.123, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்:14/08/2006 யினை, சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் வகையில் நிலைக் குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.59/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.நி.கு.ந.க.எண்.ஊ.கு. / 2999 / 3001 / 3000 / 2009.**

**ம.க.கு.ந.க.எண்.அ8 / 4197 / 4199 / 4198 / 2009**

**ஆணையாளர் அவர்களின் 15/06/2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :190/2009 பொருள் எண்: 53

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

அரசாணை நிலை எண். 234 நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.01.06.2009 ன் பரிந்துரையின்படி, அரசு பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு திருத்திய ஊதிய விகித விதிகள் 2009 ல் கடந்த 01.01.2006 முதல் திருத்தியமைத்து வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் அரசு பணியாளர்களுக்கு 01.01.2006 முதல் 31.05.2009 வரையிலான காலத்திற்கு ஊதியத்தினை திருத்தியமைத்தும் 01.01.2007 முதல் பணப்பயன்கள் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண். 236 நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.01.06.2009 ல் அரசுப் பணியாளர்களுக்கான இதர படிகளும் திருத்தியமைத்து 01.06.2009 முதல் வழங்குமாறும் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண். 237 நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.01.06.2009 ல் அரசு பணியாளர்களுக்கு பயணப்படிக்கான பணப்பயன்களை 01.06.2009 முதல் திருத்தியமைத்து வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்கள் 234, 236 மற்றும் 237 நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.01.06.2009 ல் குறிப்பிட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட ஊதியம், இதர படிகள் மற்றும் பயணப்படிகள் அனைத்தும் சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும். மேற்கண்ட ஊதிய உயர்வினால் சென்னை மாநகராட்சிக்கு நிலுவைத் தொகை தோராயமாக தொடரா செலவீனம் ரூ.90.00 கோடியும் அதில் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.30.00 கோடியும் (முதல் தவணை) மற்றும் ஒவ்வொரு மாதமும் தொடரும் செலவீனமாக ரூ.7.5 கோடியும் கூடுதலாக செலவீனம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவீனத்தை மேற்கொள்ள ஏதுவாக நடப்பு நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. இவ்வரசாணைகளை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டியும்,

2. மேலும் மேற்கண்ட ஊதிய மாற்ற விகிதம் சம்பந்தமாக இனிவருங்காலங்களில் அரசால் வெளியிடப்படும் கருத்துரைகள் ஊதிய விகித மாற்ற விகிதங்கள் போன்றவற்றினையும் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும்,

3. நிலுவைத் தொகையினை நிதி நிலைக்கேற்ப அடிப்படை பணியாளர்கள் நிலையிலிருந்து படிப்படியாக இதர பணியாளர்களுக்கும் வழங்கவும்,

நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.73/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி சமர்ப்பிக்கப்படுகின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி3/15211/2008**
**ஆணையரின் 15.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :191/2009 பொருள் எண்.:54

**அரசாணை அமலாக்கம்**

அரசாணை (நிலை) எண்.235, நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 01.06.2009ல் அலுவல் குழு பரிந்துரையின்படி ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் 01.01.2006 முதல் திருத்தியமைக்க கீழ்கண்ட விதிமுறைகளின்படி ஆணையிட்டுள்ளது.

1) தற்பொழுது ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் அடிப்படை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் 40% உயர்த்தி வழங்கவும் ;

2) 2006ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் கணக்கிடப்படவேண்டும் ;

அ) தற்பொழுது பெற்றுவரும் ஓய்வூதியம் (தொகுத்து பெறுவதற்கு முன்னர்) / குடும்ப ஓய்வூதியம் ;

ஆ) தகுதியுடைய அகவிலை ஓய்வூதியம் / அகவிலை குடும்ப ஓய்வூதியம் (Dearness Pension) ;

இ) 01.01.2006 அன்று பெற்றுவந்த ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திற்கு அனுமதிக்கப்பட்ட 24% அகவிலைப்படி ;

ஈ) அடிப்படை ஓய்வூதியத்தில் 40% (தொகுத்துப் பெறுவதற்கு முன்னர்) உயர்வு

3) குறைந்தபட்ச திருத்தப்பட்ட ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் ரூ.3050/–

4) தொகுப்புத் தொகை திருத்தப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும்.

5) அதிகபட்ச ஓய்வூதியம் – மாநில அரசின் அதிகப்பட்ச ஊதியம் ரூ.67000 + நிலை ஊதியம் ரூ.10000/–ல் 30 விழுக்காடு.

6) தற்பொழுது நிர்ணயிக்கப்படும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் ஆனது அவர் வகித்தப் பதவிக்கான திருத்தப்பட்ட குறைந்தபட்ச காலமுறை ஊதிய விகித்தில் முறையே 50 / 30 விழுக்காடுக்கு குறைவாக இருக்கக்கூடாது.

7) பணியிடை காலத்தில் காலமானதால் வழங்கப்படும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் / சாதாரண குடும்ப ஓய்வூதியம் நிர்ணயிக்க தற்பொழுது நடைமுறையில் உள்ள விதிமுறைகளையே கடைபிடிக்கவும் ;

8) ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு திருத்தப்பட்ட ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தின்படி அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்படவேண்டும்.

| | | |
|---|---|---|
| 01/07/2006 முதல் | -- | 2% |
| 01/01/2007 முதல் | -- | 6% |
| 01/07/2007 முதல் | -- | 9% |
| 01/01/2008 முதல் | -- | 12% |
| 01/07/2008 முதல் | -- | 16% |
| 01/01/2009 முதல் | -- | 22% |

9) மேற்கண்ட பயன்கள் 01.01.2006 முதல் கருதியலாகவும் 01.01.2007 முதல் பணப்பயன்கள் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

10) அதிகபட்ச இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை தொகை ரூ.3.5 லட்சத்திலிருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

11) தற்பொழுது வழங்கப்பட்டுவரும் மருத்துவபடி 01.06.2009 முதல் ரூ.50/–லிருந்து ரூ.100/–ஆக உயர்த்தவும் ;

12) 01.06.2009 முதல் ஓய்வு பெறுபவர்களுக்கு, ஏற்கனவே நடைமுறையில் உள்ளபடி ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பங்கினை திருத்தப்பட்ட தொகுப்பு அட்டவணை–1–ன்படி தொகுத்து வழங்கவும் ;

<u>பொது.ந.க.எண்.பி3/15211/2008</u>

13) 01.01.2006க்கு பின்னர் ஓய்வுப்பெற்றவர்களுக்கு ஊதியம் திருத்தப்பட்டதால் ஏற்படும் வித்தியாசத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு தொகுத்துப்பெற தகுதியுடையவர்கள். 01.01.2006க்கு முன்னர் ஓய்வுப்பெற்றவர்களுக்கு இச்சலுகை பொருந்தாது.

திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தின் நிலுவைத் தொகை 01.01.2007 முதல் 31.05.2009 வரையிலான காலத்திற்கு கணக்கிடப்பட்டு இதில் ஏற்கனவே 01.01.2009 அன்று வழங்கப்பட்ட இடைக்கால நிலுவைத் தொகை (மூன்றுமாத ஓய்வூதியம்) நேர் செய்து மீதத் தொகையினை சரிசமமாக மூன்று தவணைகளில், முதல் தவணை 2009–10, இரண்டாவது தவணை 2010–11 மற்றும் மூன்றவாது தவணை 2011–12 நிதியாண்டுகளில் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் தோராயமான தொடரா செலவீனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (அ) | 01/01/2007 முதல் 31/05/2009 வரை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வுதியம் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை | ரூ.11.78 கோடி |
| (ஆ) | திருத்தப்பட்ட பணிக்கொடைத் தொகை | ரூ.22.12 கோடி |
| (இ) | திருத்தப்பட்ட தொகுப்பு ஓய்வூதியத் தொகை | ரூ.16.14 கோடி |
| | | ரூ.50.04 கோடி |

2009–10ஆம் ஆண்டிற்கான முதல் தவணை செலவீனங்கள் கீழ்வருமாறு : --

| | | |
|---|---|---|
| (அ) | ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகை | ரூ.3.93 கோடி |
| (ஆ) | திருத்தப்பட்ட பணிக்கொடைத் தொகை | ரூ.7.37 கோடி |
| (இ) | திருத்தப்பட்ட தொகுப்பு ஓய்வூதியத் தொகை | ரூ.5.38 கோடி |
| | | ரூ.16.68 கோடி (அ) ரூ.17 கோடி |

மேற்படி அரசாணையை சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்தும் பட்சத்தில், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகை தோராயமாக தொடரா செலவீனம் ரூ.50.04 கோடி, அதில் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.17 கோடி (முதல் தவணை) மற்றும் மாதம்தோறும் தொடர் செலவீனம் ரூ.1.5 கோடி (ஆண்டிற்கு ரூ.18 கோடி) ஏற்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இச்செலவினத்தை மேற்கொள்ள ஏதுவாக நடப்பு நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, 1) அரசாணை எண்.235, நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 01.06.2009யினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டியும் ;

2) மேலும் திருத்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் சம்பந்தமாக இனிவருங்காலங்களில் அரசால் வெளியிடப்படும் கருத்துரைகள், ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதிய உயர்வு விகிதங்கள் போன்றவற்றினையும் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும் ;

நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுறது.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.74/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி சமர்ப்பிக்கப்படுகின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ8/3719/2009**
**ஆணையாளர் அவர்களின் 26/05/2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :192/2009 பொருள் எண்:55

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

31.03.2009 நாளிட்ட அரசாணை(4டி) எண்.2, (கடன் & முன்பணம்) துறையில் 2008–2009 ஆண்டிற்கான மாநில அரசால் வழங்கப்படும் பலதரப்பட்ட கடன் மற்றும் முன்பணத்திற்கான செலுத்த வேண்டிய வட்டி விகிதத்தை கீழ்கண்டவாறு நிர்ணயித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணை 01.04.2008 முதல் அமுலுக்கு வருகிறது. இவ்வரசாணையில் சென்னை மாநகராட்சி பணிகள் மற்றும் பணியாளர்கள்/ அலுவலர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வட்டி விகிதம் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கடன் / முன்பணம் | 2007–08ற்கான வட்டி விகிதம் (சதவீதத்தில்) |
|---|---|---|
| 01. | **மாநில அரசால் நிர்வகிக்கப்படும் தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்கள்/ மாநகராட்சிகள் முதலியனவற்றுக்கு (நிதி கழகங்கள் அனைத்து உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சிகள் உட்பட) வழங்கப்படும் கடன்கள்.** | |
| | அ. வளர்ச்சிப்பணிக்கான திட்டங்கள் | 10.00 |
| | ஆ. மற்ற திட்டங்கள் | 11.00 |
| | இ. முதலீடு மற்றும் அபிவிருத்தி பணிகள் | 10.50 |
| | ஈ. மூலதன பணிக்கு ஆதாரமான தொகை | 14.50 |
| | உ. வழிவகைகளுக்கான முன்பணம் மற்றும் ரொக்க இருப்பு ஈடு செய்ய கடனாக வழங்கப்படும் முன்பணம். | 12.00 |
| 02. | **வீடு கட்ட வழங்கப்படும் முன்பணம்** | |
| | அ. ரூ.50,000/–ற்கு உட்பட்ட கடன் | 5.00 |
| | ஆ. ரூ.50,001/– முதல் ரூ.1,50,000/– வரையிலான கடன் | 6.50 |
| | இ. ரூ.1,50,001/– முதல் ரூ.5,00,000/– வரையிலான கடன் | 8.50 |
| | ஈ. ரூ.5,00,001/– முதல் ரூ.7,50,000/– வரையிலான கடன் | 9.50 |
| 03 | **வாகனம் வாங்க வழங்கப்படும் முன்பணம்** | |
| | அ. மோட்டார் கார் வாங்குவதற்கு | 11.50 |
| | ஆ. மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர் வாங்குவதற்கு | 8.00 |
| | இ. மிதிவண்டி | 5.50 |
| 04 | **மற்றவைகள்** | |
| | அ. கணினி வாங்குவதற்கு | 10.00 |
| | ஆ. இதர கடன்கள் | 10.00 |
| 05 | **பிற இனங்கள்** | |
| | மேற்கூறப்பட்ட எந்த வகையிலும் சேராமல் தனிப்பட்ட முறையில் வழங்கப்படும் கடன்கள். | 12.00 |
| 06 | **அபராத வட்டி** | 2.50 |

**ம.க.கு.ந.க.எண்.அ8/3719/2009**

31.03.2009 நாளிட்ட அரசாணை(4டி) எண்.2, நிதி (கடன் மற்றும் முன்பணம்) துறை, இதனை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.60/09 நாள் 18.6.2009–ன் படி இதற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.ஜி1/47707/2008**
**ஆணையரின் 6.2.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :193/2009 பொருள் எண் 56

**டோபிகானா பயன்பாட்டுத் தொகை நிர்ணயித்தல்**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.292 ன்படி, துணிகளை துவைக்க தனி இடத்தினை ஒதுக்க ஏற்பாடுகளை சென்னை மாநகராட்சி செய்திடவேண்டும். இச்சட்டப் பிரிவின்படி, சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் டோபிகானா என்று அழைக்கப்படும் துணிகளை துவைக்கும் இடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் துணி துவைக்கும் கல் மற்றும் துவைக்கின்ற துணிகளை இஸ்திரி (Iron ) செய்ய தனியே அறைகளும் கட்டப்பட்டுள்ளன.

துவைத்த துணிகளை இஸ்திரி செய்ய தற்போது மின்சார சாதனங்கள் ( Iron Box) உபயோகிக்கப்படுவதால், இவ்விடங்களுக்கு சென்னை மாநகராட்சியால் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி துணிகள் துவைக்கும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள துணி துவைக்கப்பயன்படுத்தப்படும் கல்களை பயன்படுத்திக்கொள்ள ஒவ்வொரு மண்டலங்களிலும் ஒவ்வொரு விதமாக தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கல்லுக்கு குறைந்த பட்சம் மாதத்திற்கு ரூ.6.00 என்றும், அறைகளுக்கு குறைந்தபட்சம் ரூ.50.00 என்றும் மாத பயன்பாட்டுத் தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி இடங்களில் துவைத்த துணிகளை இஸ்திரி செய்ய மின்சாதனங்கள் பயன்படுத்தப்படுவதால் ஆகும் மின்சாரக் கட்டணமானது.

1. ஒரு சில இடங்களில் பயன்பாட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியால் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

2. ஒரு சில இடங்களில் பயன்பாட்டாளர்களே ஒன்று சேர்ந்த மின்சாரத் தொகையினை வசூலித்து மின்சார வாரியத்திற்கு செலுத்தி வருகிறார்கள்.

3. ஒரு சில இடங்களில் சென்னை மாநகராட்சியிடமிருந்து ஆட்சேபணையின்மையினை பெற்று பயன்பாட்டாளர்கள் நேரடியாக மின்சார வாரியத்திடமிருந்து இணைப்புகளைப் பெற்று, மின் கட்டணத்தினை நேரடியாக மின்சார வாரியத்திற்கு செலுத்தி வருகின்றனர்.

இவ்வாறு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு கல் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டும், வெவ்வேறு இடங்களில் ஒவ்வொரு விதமாக மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டு வருவதால் ஏற்படும் சிக்கல்களைகளைய இந்நிகழ்வில் ஒரே மாதிரியான ஏற்பாடுகளை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919, பிரிவு எண்.292 (1)ல், துணிகளை துவைக்கும் இடத்தினை பயன்படுத்திக்கொள்ள வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழுவால் நிர்ணயம் செய்யப்படும் தொகையினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், 2.01.2009 நாளிட்ட மன்றத் தீர்மானம் எண்.37ல் கல் கட்டணத்தினை குறைப்பது குறித்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மறு பரிசீலினை செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே,

அ) அனைத்து மண்டல அலுவலகங்களில் உள்ள டோபிகானா என்று அழைக்கப்படும் துணிகள் துவைக்கும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள கற்களை பயன்படுத்திக் கொள்ள 1.4.2009 முதல் ஒரே மாதிரியாக தொகையினை நிர்ணயம் செய்யவும்.

ஆ) அனைத்து மண்டல அலுவலகங்களில் உள்ள டோபிகானா என்று அழைக்கப்படும் துணிகள் துவைக்கும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அறைகளை பயன்படுத்திக் கொள்ள 1.4.2009 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.50/– என்று ஒரே மாதிரியாக தொகையினை நிர்ணயம் செய்யவும்

இ) மேற்படி தொகைகளை 3 வருடத்திற்கு ஒருமுறை 50 விழுக்காடு உயர்த்தி நிர்ணயம் செய்திடவும்,

ஈ) சென்னை மாநகராட்சியின் ஆட்சேபணையின்மையினை பெற்ற பின்னர், மேற்டிபடி இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அறைகளுக்கான மின் இணைப்பினை பயன்பாட்டாளர்கள் நேரடியாக மின்சார வாரியத்திடமிருந்து சென்னை மாநகராட்சி பெயரிலேயே பெற்றுக் கொண்டு (மோட்டாருக்கான கட்டணத்தினையும் சேர்த்து) மின் கட்டணத்தினை நேரடியாக மின்சார வாரியத்திற்கு செலுத்தக் கோரிடவும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.6.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.58/09 நாள் 18.6.2009–ன் படி கல் வாடகை நாளொன்றுக்கு ரூ.1/– வீதம் வசூலிக்கலாம் என்ற திருத்தத்துடன் நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.நி.பி.எண்: பி1 / 7311 / 2008.**
**ஆணையர் அவர்களின் 17.06.2009 நாளிட்ட குறிப்பு**

**30.06.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :194/2009 பொருள் எண்:57

**வரவு செலவு திட்டம் – திருத்திய மதிப்பீடு 2008–2009 – மாற்றியமைக்கப்பட்ட மூலதன செலவு மற்றும் வருவாய் செலவின ஒதுக்கீடுகளுக்கு பின்னேற்பு அனுமதி கோருதல்.**

